**CC.No.205/2023 (JM.No.II, DHARMAPURI)**

**19.05.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் )**

**PW–1 : வெங்கடேசன், த/பெ பங்காரு**

**முதல் விசாரணை**

நான் பாகலஅள்ளியில் குடியிருந்து, ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. 26.04.2020 காலை 9.00 மணிக்கு நாராயணபுரத்தில் உள்ள என்னுடைய நிலத்தில் உள்ளபோது ஆஜர் எதிரி எங்களுடைய நிலத்தில் வீடு கட்டுவதற்காக கட்டிடத்தை நிரவி கொண்டு இருந்தார். ஆஜர் எதிரியிடம் என் அம்மா பெயரில் உள்ள நிலத்தை சேர்த்து ஏன் கட்டிகிறார் என்று கேட்டதற்கு நான் அப்படி தான் கட்டுவேன், தேவடியா பையா என்ற கெட்ட வார்த்தையால் திட்டினார். அங்கு வேலை செய்பவர்களை செய்ய வேண்டாம் என்று தடுத்தேன். கல்லால் எனது தலையின் மீது சிலம்பரன் என்பவர் தாக்கினார். இரும்பு மட்டை கோலால் என் நெற்றியின் மீது ஆஜர் எதிரி தாக்கினார். சம்பவ இடத்திலேயே நான் மயக்கம் அடைந்தேன். என்னுடைய தம்பி சவுந்தர்ராஜன் என்பவர் பாளையம்புதூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். பின்னர் தருமபுரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்றேன். அப்போது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆககுறியீடு செய்யப்பட்டது. இது குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.05.19 17:26:39 +0530

CC.No.205/2023 (JM.No.II, DHARMAPURI)

19.05.2026

சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் )

PW–2 : புவனேஸ்வரி, க/பெ ஜெகன்மோகன்

<u>முதல் விசாரணை</u>

நான் தளவாய்பட்டியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 என்னுடைய அண்ணா ஆவார். 2020 வருடம் கொரானா சமயம் காலை 09.00 மணிக்கு நாராயணபுரத்தில் உள்ள என்னுடைய அம்மா நிலத்தில் உள்ளபோது ஆஜர் எதிரி எங்களுடைய நிலத்தில் வீடு கட்டுவதற்காக கட்டிடத்தை நிரவி கொண்டு இருந்தார். ஆஜர் எதிரி கட்டிடம் கட்டி இருப்பதாக அ.சா.1க்கு தகவல் சொன்னேன். அவர் சம்பவ இடத்திற்கு வந்தார். அவர் எதிரியிடம் எதற்கு கட்டிகிறார் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி மட்டை கோலால் அ.சா.1ஐ தாக்கினார். அ.சா.1ஐ கீழே தள்ளி எதிரி அவரின் நெஞ்சின் மீது தாக்கினார். அங்கு இருந்தவர்களை நான் விலக்கிவிட்டேன். பின்பு காயம் பட்ட அவரை தருமபுரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.05.19 17:26:45 +0530

**CC.No.205/2023 (JM.No.II, DHARMAPURI)**

**19.05.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் )**

**PW–3 : தேவராஜ், த/பெ வேடியப்பன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் சொக்கநேரில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2ஐ தெரியும். இந்த வழக்கு சம்பவமாக நான் நேரில் தெரியாது. இந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

கடந்த 26.04.2020 தேதி காலை 09.00 மணியவில் நான் வெங்கடேசன் நிலத்தின் வழி சென்றதாகவும், அப்போது எதிரி சஞ்சீவன் ஆலோபிளாக் கல் போட்டு கொட்டகை போட்டதாகவும், அதை அ.சா.1 எதற்கு என்னை கேட்காமல் கட்டியதாக கேட்டதாகவும், எதிரி அ.சா.1ஐ கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும், எதிரி அங்கு வைத்து இருந்த மட்டை கோலாலில் அ.சா.1 மண்டையில் தாக்கியதாகவும், காயம்பட்ட அவரை நானும், அ.சா.2யும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு ஆஜர் எதிரி அண்ணா உறவு முறை என்பதால் இந்த சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், போலிசார் விசாரிக்கவில்லை என்றும், எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.05.19 17:26:51 +0530

**CC.No.205/2023 (JM.No.II, DHARMAPURI)**

**19.05.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் )**

**PW–4 : செல்வம், த/பெ நஞ்சப்ப கவுண்டர்**

**முதல் விசாரணை**

நான் தொம்பரகாம்பட்டியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2ஐ எனக்கு தெரியும்.

**அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 26.04.2020 தேதி காலை 09.00 மணியவில் நான் வெங்கடேசன் நிலத்தின் வழி சென்றதாகவும், அப்போது எதிரி சஞ்சீவன் ஆலோபிளாக் கல் போட்டு கொட்டகை போட்டதாகவும், அதை அ.சா.1 எதற்கு என்னை கேட்காமல் கட்டியதாக கேட்டதாகவும், எதிரி அ.சா.1ஐ கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும், எதிரி அங்கு வைத்து இருந்த மட்டை கோலாலில் அ.சா.1 மண்டையில் தாக்கியதாகவும், காயம்பட்ட அவரை நானும், அ.சா.2யும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு ஆஜர் எதிரி அண்ணா உறவு முறை என்பதால் இந்த சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், போலிசார் விசாரிக்கவில்லை என்றும், எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.05.19 17:26:57 +0530